***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 189/2015 – P.W. 3 புலித்தேவன் த/பெ. பாலகுரு***
**நாள் 07.05.2026**

**1,2,3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**

***2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை***

நான் ரோந்து பணியில் இருந்தாலும், வழக்கமான போலீஸ் பணியை செய்வதை பின்பற்றிவருவது தான் நடைமுறை என்றால் சரிதான். ரோந்து பணி என்பது வடுவூர் ஏரியில் இருந்து தொடங்கி திருவாரூர் தியானபுரம் வரை உள்ள பிரதானசாலையில் செல்வது. நாங்கள் இந்த வழக்கின் 1 வது எதிரியை பார்த்ததாக சொல்லப்படும் இடம் என்பது நாங்கள் செல்லக்கூடிய பிரதான சாலையில் இல்லை என்றால் சரிதான். நாங்கள் வழக்கமாக செல்லக்கூடிய ரோந்து இடத்தில் இருந்து சுமார் 500 முதல் 600 மீட்டர் வரை தொலைவில் தென் திசையில் இருக்ககூடிய ஒரு இடம்.

நாங்கள் வழக்கமாக பிரதான சாலையில் மட்டும் தான் செல்லவேண்டும் என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரும் உத்தரவிற்கிணங்க அங்கும் செல்வோம். அவ்வாறு இருக்கையில் குறிப்பிட்ட நடந்ததாக சொல்லப்படும் சம்பவ நாளில் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து நடந்ததாக சொல்லப்படும் குற்ற சம்பவத்திற்கு உத்தரவு ஏதும் இல்லை. அது தொடர்பாக எனது விசாரணையிலும் குறிப்பிடவில்லை. எங்களது வாகனத்திலும், எங்களது கையிலும் தொலைதொடர்பு தொடர்பாக அனைத்து சாதனங்களும் எங்கள் வசம் இருக்கும்.

2 வது எதிரியிடம் இருந்து ரப்பர் ஸ்டாம்பு போன்ற எந்தவொரு தடயப்பொருளும் நான் கைப்பற்றப்படவில்லை. 2 வது எதிரி எனக்கு முன்பே தெரிந்த நபர் இல்லை. 2 வது எதிரியை பற்றிய விபரங்களை 1 வது எதிரி சொன்னதன் அடிப்படையில் தான் தெரியும் என்று எனது விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன். நாங்கள் 2 வது எதிரியை பார்த்து விசாரித்தபோது எந்தவொரு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரியின் கடைக்கு நான் சென்றதாக சொல்லும் நிலையில் அங்கு கம்பியூட்டர், பிரிண்டர் போன்ற கணினியின் சாதனங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

1 வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருட்கள் சம்பந்தமாக தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரியை நான் கைது செய்வதற்கு முன்பாக ஏதேனும் முதல்கட்ட விசாரணையை செய்தேனா என்றால் செய்தேன். அவ்வாறு இருக்கையில் முதல்கட்ட விசாரணை நான் செய்தது தொடர்பாக ஆய்வாளர் விசாரணையிலோ, புகாரிலோ குறிப்பிட்டியிருக்கிறேனா என்றால் குறிப்பிட்டுயிருக்கிறேன்.

1 வது எதிரி கூறியதாக சொல்லப்படும் தகவல்களை நான் ஏதேனும் வாக்குமூலமாக பதிவு செய்தேனா என்றால் இல்லை. புகாரில் குறிப்பிட்டுள்ளேன். வாக்குமூலங்கள் பதிவு செய்ததின் அடிப்படையில் அந்த தகவலின் படி சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக ஆவணங்களில் குறிப்புகள் இல்லை. 2 வது எதிரியின் கடை இருப்பதாக சொல்லப்படுவது சாமி தியேட்டருக்கு கீழ் புறம். சாமி தியேட்டர் இருக்ககூடிய பகுதி என்பது கிழக்கு மேற்கு திசையில் உள்ள சாலையில் தென்புறமாக உள்ளது. சாமி தியேட்டருக்கு எதிர்புறம் என்பது வடக்கு திசையில் அமைந்துள்ளது.

சாதாரணமாக நாங்கள் ரோந்து பணியில் இருக்கும் போது ஏதேனும் அசம்பாவிதமோ அல்லது குற்ற நிகழவோ ஏற்படின் உடனடியாக சம்பந்தப்பட்ட ஆளுகைக்கு உட்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக என்னிடம் தொலைதொடர்பு சாதனங்கள் இருக்கும் பட்சத்தில் உடனடியாக ஆளுகைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் நான் தகவல் தெரிவிக்கவில்லை. என்னுடன் தலைமை காவலர் ஆறுமுகம், YB. சாமிநாதன் ஆகியோர்கள் இருந்தார்கள். என்னுடன் ஜீப் வாகனமும் இருந்தது. சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் வழக்கு சம்பவம் இல்லை என்றாலும், எதிரியை தொடர்புபடுத்தி முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றும், பின்யோசனையிட்டு உருவாக்கப்பட்ட வழக்கில் புகார்தாரராக நான் செயல்பட்டு அதற்கு அனுசரணையாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2 வது எதிரியினுடைய குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

<u>3 வது எதிரி தரப்பில் குற்கு விசாரணை</u>

மன்னார்குடி சாமிதியேட்டரில் இருந்து திருமஞ்சன வீதி வரை 1 1/2 கிமீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமாக புகாரை யார் எழுதியது என்றால் நான் தான். புகாரில் புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று தேதி, இடம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை மறுவிசாரணை செய்தாரா என்றால் இல்லை. என்னிடம் 2 வது எதிரி மனோகரனை பற்றி குறிப்பிட்டதாக சொல்லும் நிலையில் அவரது வீட்டிற்கு சென்று அவரை விசாரிக்கவோ அல்லது அவர் பற்றிய விவரங்களை தெரிந்துகொள்ளவோ எந்த முயற்சி எடுக்கவில்லை என்றால் சரிதான்.

மேற்படி புகாரை காவல் ஆய்வாளரிடம் கொடுத்துவிட்டு எனது பணியை முடித்துவிட்டேன் என்றால் சரிதான். நான் சொல்வது போன்று சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், பின்யோசனையிட்டு ஏற்படுத்தப்பட்ட புகாருக்கு ஆதரவாக புகார்தாரராக நான் செயல்பட்டு அதற்கு அனுசரனையாக முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.